### அன்னைத் தமிழ் காக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற

# ஆற்றல் மிகு செயல்வீரர் வேணுகோபால்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, பிப். 17–

"அன்னைத் தமிழ் காக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற ஆற்றல்மிகு செயல்வீரர் த.வேணுகோபால் அவர்கள்" என்று அவரது மறைவு குறித்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:–

தாய்த்தமிழைக் காக்கும் போரில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட மொழிப்போர் தியாகி வேணுகோபால் அவர்கள் மறைந்தார் என்ற செய்தியறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

இன – மான – மொழியுணர்வோடு திராவிட இயக்கப் பட்டறையில் வார்ப்பிக்கப்பட்ட கொள்கை தீரரான வேணுகோபால் அவர்கள் இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராகவும் – ஐந்து முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றியவர். 2009–ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலேயே அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பெருமைக்குரியவர்.

வேணுகோபால் அவர்கள் 40 ஆண்டுகள் மாவட்ட அவைத்தலைவராக இருந்தவர். 2019–ஆம் ஆண்டு திருவண்ணாமலையில் நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் தந்தை பெரியார் விருதை அவருக்கு வழங்கி மகிழ்ந்த தருணத்தைத் தற்போது எண்ணிப் பார்த்து நெகிழ்கிறேன்.

அன்னைத் தமிழ் காக்கும் அனைத்துப் போராட்டங்களிலும் முன்னின்ற ஆற்றல்மிகு செயல்வீரரான, அனைவரது நன்மதிப்பைப் பெற்ற மக்கள் தொண்டரான வேணுகோபால் அவர்களின் மறைவு கழகத்துக்கும் திருவண்ணாமலை மக்களுக்கும் பேரிழப்பாகும்.

அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், கழக உடன்பிறப்புகளுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.



மறைந்த திருவண்ணாமலை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் த.வேணுகோபால் அவர்களின் உடலுக்கு, பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என். அண்ணாதுரை எம்.பி, இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப்ரியா விஜயரங்கன், ப.கார்த்திவேல்மாறன், கோ.கண்ணன், நிர்மலா வேல்மாறன் உட்பட பலர் உள்ளனர்.

### திருவண்ணாமலை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் – மொழிப்போர் தியாகி

# த.வேணுகோபால் மறைவு! 3 நாட்கள் கழக நிகழ்ச்சிகள் ரத்து!

## அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!

திருவண்ணாமலை, பிப். 17 -

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான த.வேணுகோபால் அவர்கள் இயற்கை எய்தினார். திருவண்ணாமலை மாவட்டத்தில் மூன்று நாட்களுக்கு கழக நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்படுகிறது என பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து பொதுப் பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு விடுத்த அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. அவைத்தலைவரும், நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும், கழக முப்பெரும் விழாவில் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களால் தந்தை பெரியார் விருது பெற்றவருமான கழகத்தின் மூத்த முன்னோடியுமான த.வேணுகோபால் அவர்கள் உடல் நலம் குன்றியும், முதுமையின் காரணமாக நம்மை விட்டு பிரிந்து விட்டார்.

த.வேணுகோபால் மறைவையொட்டி திருவண்ணாமலை மாவட்டத்தில் பிப்ரவரி 15, 16, 17 ஆகிய மூன்றுநாட்கள் அனைத்து கழக நிகழ்ச்சிகளும் ரத்து செய்யப்படுகிறது. கழக கொடிகம்பங்களில் கொடியினை அரைக் கம்பத்தில் பறக்கவிட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### திருவண்ணாமலை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்

# மொழிப்போர்த் தியாகி த.வேணுகோபால் மறைவு!

திருவண்ணாமலை, பிப்.17

திருவண்ணாமலை மாவட்டக் கழக அவைத் தலைவராக 40 ஆண்டு காலமாக செயல்பட்டு வந்த, கழகத்தின் மூத்த முன்னோடி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், மொழிப்போர் தியாகி த. வேணுகோபால் (வயது 88) நேற்று முன்தினம் பகல் 2.30 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

அவருக்கு 2 மகள்கள் உள்ளனர்.

மறைந்த த.வேணுகோபால் அவர்கள் 2 முறை சட்டமன்ற உறுப்பினராகவும், 5 முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும், ஒரு முறை ஒன்றியக் குழுத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

கழகம் நடத்திய அத்தனை போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றுள்ளார். 2009-ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலேயே அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர் மறைந்த த.வேணுகோபால்.

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் பெரியார் விருது பெற்ற அவர், திருப்பத்தூர், திருவண்ணாமலை மாவட்டக் கழகத்தினருடன் நெருங்கி பழகி வந்தவர். சில நாட்கள் உடல்நலிவுற்றிருந்த நிலையில் பிற்பகல் 2 மணியளவில் இயற்கை எய்தினார்.

தகவலறிந்து அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்டக் கழக நிர்வாகிகள் சி.என். அண்ணாதுரை எம்.பி., சரவணன், மு.பெ.கி. அம்பேத்குமார் இரா.ஸ்ரீதரன், டாக்டர் எ.வ.வே.கம்பன், பிரியா விஜயரங்கன், பன்னீர் செல்வம், கார்த்திக் வேல்மாறன், அருணை வெங்கட், மாவட்ட ஆட்சியர் பாஸ்கர பாண்டியன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் காட்டாம்பூண்டியில் உள்ள அவரது இல்லத்திற்குச் சென்று தங்களது இறுதி அஞ்சலியை செலுத்தினர்.

மறைந்த த.வேணுகோபால் அவர்களின் இறுதி ஊர்வலம் நேற்று பகல் 1 மணியளவில் நடைபெற்றது.

### நாடாளுமன்றத் தேர்தல்-2024

# 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும் விரிவான சுற்றுப் பயணம்!

(திருத்தப்பட்டது)

## தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024-நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக்குழு (திருத்தப்பட்டது)**

**1.23.02.2024-வேலூர் (காலை 10.00 மணி)-வேலூர் ராணிப்பேட்டை திருப்பத்தூர், ஆரணி (மாலை 3.00 மணி) திருவண்ணாமலை வடக்கு,திருவண்ணாமலை தெற்கு.**

**2.26.02.2024-தஞ்சாவூர் (காலை) தஞ்சை வடக்கு-தஞ்சை மத்திய-தஞ்சை தெற்கு-திருவாரூர்-நாகை-மயிலாடுதுறை-திருச்சி வடக்கு-திருச்சி தெற்கு-திருச்சி மத்திய-புதுக்கோட்டை வடக்கு-புதுக்கோட்டை தெற்கு, விழுப்புரம் (மாலை 3.00 மணி) விழுப்புரம் வடக்கு- விழுப்புரம் தெற்கு-கடலூர் கிழக்கு-கடலூர் மேற்கு-அரியலூர்-பெரம்பலூர்.**

**3.27.02.2024 -சென்னை (மாலை 3.00 முதல்)-காஞ்சிபுரம் வடக்கு-காஞ்சிபுரம் தெற்கு-திருவள்ளூர் கிழக்கு-திருவள்ளூர் மேற்கு -திருவள்ளூர் மத்திய.**

**4.28.02.2024-சென்னை (காலை 10.00 மணி முதல்)-சென்னை வடக்கு-சென்னை வடகிழக்கு-சென்னை கிழக்கு-சென்னை மேற்கு- சென்னை தென்மேற்கு-சென்னை தெற்கு.**

மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"** **தலைமைக் கழகம்**

சென்னை-18. தி.மு.க.

நாள் : 15.2.2024

### சட்டமன்றத்தில் முதலமைச்சர் கொண்டு வந்து நிறைவேற்றிய இரு அரிய தீர்மானங்கள்!

# ஒன்றிய பி.ஜே.பி. அரசின் நோக்கத்தை முறியடிப்போம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



சென்னை, பிப்.17

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறை வேற்றப் பட்ட இரு முக்கிய தீர்மானங்களை வரவேற்றும், ஜனநாயகம், மாநில உரிமைகளைப் பாதுகாக்கும் அரிய முயற்சி என்று பாராட்டியும் திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

14.2.2024 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் நமது முதலமைச்சர் "சமூகநீதிக்கான சரித்திர நாயகர்" மு.க.ஸ்டாலின் அவர்களால் இரண்டு முக்கியமான தனித் தீர்மானங்கள் முன்மொழியப்பட்டு, அவையில் வழிமொழிந்து ஒருமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளன.

ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கு எதிராக சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம்!

"ஒரே நாடு, ஒரே தேர்தல்" என்ற கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக, அரசமைப்புச் சட்டத்திற்கு முரணாக ஒன்றியத்தில் உள்ள ஆர்.எஸ்.எஸ். பா.ஜ.க. மோடி அரசு கொண்டுவரத் திட்டமிட்டுள்ளதை ஏற்கவியலாது என்பதை நாடு முழுவதும் அறிந்துகொள்ளும் வகையில், தமிழ்நாடு இதில் ஒருமித்த குரலோடு (பா.ஜ.க. தவிர) இருக்கிறது என்பதை 14.2.2024 அன்று நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தெளிவாகப் பிரகடனப் படுத்துகிறது!

இந்த சிந்தனை என்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பல ஜனநாயக அமைப்புகளுக்கும் தேர்தல்கள்மூலம் நடைமுறைப்படுத்த வேண்டிய பல்வேறு சட்டப் பிரிவுகளுக்கும் அதனை உருவாக்கிய அரசமைப்புச் சட்ட கர்த்தாக்களின் (Founding Father of the Constitution) கருத்துகளுக்கு முற்றிலும் மாறானது.

1. நாடாளுமன்றத் தேர்தல்

2. மாநில சட்டமன்றங்களுக்குரிய தேர்தல்

3. உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தல்

என்றுள்ள அமைப்பில், 'ஒரே சீர்மையைப் புகுத்து கிறோம்' என்ற சாக்கில், இது தனி ஒற்றை ஆட்சிக்கான அஸ்திவாரம் போடுவது ஆகும்.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கரின் கருத்தை நிறைவேற்றத் துடிக்கிறது ஆர்.எஸ்.எஸ். கொள்கை கொண்ட ஒன்றிய பி.ஜே.பி. ஆட்சி! நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கட்சித் தாவல்கள்மூலம் ஜனநாயக ஆட்சி பலம் குன்றினால், உடனடியாக மறுதேர்தல்களை நடத்த முடியாத நிலை இப்படி பல சட்டச் சிக்கல்கள், நடைமுறைக்கு ஒவ்வாதவை போன்ற பல உண்டு.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வால்கர் கருத்துக்கு செயல் வடிவம் தருவதே இதன் உள்நோக்கம்!

இதனை நன்கு புரிந்த உண்மையான ஜனநாயகப் பாதுகாவலர்கள் இந்தியா முழுவதிலும் உள்ளவர்கள் இதனை எதிர்க்கிறார்கள்.

அதனை தமிழ்நாடே எதிர்க்கிறது என்ற பிரகடனம் தான் நமது முதலமைச்சர் கொண்டு வந்து நிறைவேற்றிய அந்தத் தீர்மானம்!

இரண்டாவதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் திட்டமிட்டே தென்மாநிலங்களின் நாடாளுமன்ற மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கையை குறிப்பாக தமிழ்நாடு, கேரளா போன்ற மாநிலங்களின் எண்ணிக்கை மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்ற ஒரு சூழ்ச்சிப் பொறியை தயாரிக்கின்றது ஒன்றியத்தில் உள்ள பா.ஜ.க. மோடி அரசு.

இந்திய அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்று மக்கள் தொகைக் கட்டுப்பாடு (Population Control) அது குடும்பக் கட்டுப்பாட்டு திட்டத்தின்மூலம் சாத்தியம் என்ற ஒன்றிய அரசு, மாநில அரசுகள் தங்களது சுகாதாரத் துறை, மருத்துவத் துறை மூலம் வெற்றிகரமாக செய்து, மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் வெற்றி பெற்றால், அதற்குத் தண்டனை தருவதுபோல, மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு என்ற போர்வையில், தமிழ்நாடு போன்ற முற்போக்கு சிந்தனையுடன் சிறப்பாக ஆட்சி நடத்தும் மாநிலங்களுக்குப் பரிசளித்துப் பாராட்டுவதற்குப் பதிலாக, இப்படி தொகுதிகளைக் குறைத்து, பி.ஜே.பி.,க்கு, ஆர்.எஸ்.எஸ்.சுக்கு தேர்தல் வெற்றி வாய்ப்பில்லாத மாநிலங்களுக்குரிய குரலை ஒடுக்கும் மக்கள் விரோத ஜனநாயக ஒடுக்கு முறை என்பதால், இதனையும் எதிர்த்த தீர்மானமாக நமது முதலமைச்சர் முன்மொழிந்து அவை வரவேற்று வழிமொழிந்து ஏற்றுள்ளது.

இவை இரண்டும் இந்திய ஜனநாயகக் காப்பில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்றுச் சாதனைகளாகும்.

இதனை நாம் வரவேற்று, பாராட்டி முதலமைச்சருக்கு நன்றியும் கூறுகிறோம்.

அதுபோலவே, முக்கிய எதிர்க்கட்சியான அ.இ. அ.தி. மு.க. தமிழ்நாடு சட்டமன்றத்தில் இந்த இரு தீர்மா னங்களையும் வரவேற்று, ஆதரவாக வாக்களித்தது வரவேற்கத்தக்கது.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதியில்

# "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பொதுக்கூட்டம்!

## சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் வேண்டுகோள்!



சேலம், பிப். 17 -

"உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" பரப்புரைக் கூட்டம் குறித்து சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக அ.தி.மு.க. அரசின் பத்தாண்டு கால முறையற்ற நிர்வாகம், மக்களின் குறைகள், துன்பங்களைநேரடியாக கேட்டறிந்திட கழக முன்னணியினர் "விடியலை நோக்கி ஸ்டாலினின் குரல்" என்ற பரப்புரையில் பங்கேற்று அ.தி.மு.க.வை மக்கள் நிராகரிப்பதற்கான அடித்தளமிட்டனர்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் அறிவிப்பிற்கு இணங்க வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தல் 2024இல் கடந்த பத்தாண்டு காலத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு, தமிழ்நாட்டிற்கு இழைத்த அநீதிகளையும், ஒன்றிய அரசிடம் மாநிலத்தின் உரிமைகளை அடகு வைத்து தற்பொழுது நாடகமாடும் அடிமை அ.தி.மு.க.வின் துரோ கங்களையும் மக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில், முதற்கட்டமாக, கழக முன்னணியினர் "உரிமைகளை மீட்க ஸ்டாலினின் குரல்" என்ற தலைப்பில் வருகின்ற 17.02.2024 சனிக்கிழமை இன்று மாலை 05.00 மணிக்கு கள்ளக்குறிச்சி கலைஞர் திடல் (A.K.T. பள்ளி அருகில்) கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்று சிறப்புரை யாற்றவுள்ளார்.

இந்நிகழ்ச்சியில் வசந்தம் க.கார்த்திகேயன் எம்எல்ஏ (கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட செயலாளர்) ,தா. உதய சூரியன் எம்எல்ஏ (கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட செயலாளர்), டாக்டர்.பொன்.கௌதம சிகாமணி (கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர்) க.வேங்கடபதி (மேனாள் சட்டத் துறை இணை அமைச்சர்) , ஆ. அங்கையர் கண்ணி (மாநில மகளிரணி துணை செயலாளர்), தங்க . சித்தார்த்தன் (மாநில விவசாய அணி துணை செயலாளர்), கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதிக்கு உட்பட்ட (ஆத்தூர், கெங்கவல்லி, ஏற்காடு) ஆகிய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நகர்மன்ற தலைவர்கள், பேரூராட்சி தலைவர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாநில நிர்வாகிகள், கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் என பெரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.



கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று கழக இலக்கிய அணி மாநில இணைச் செயலாளர் மறைந்த கயல் தினகரன் அவர்களின் உடலுக்கு மலரஞ்சலி செலுத்தினார். உடன் அமைச்சர் மா.சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் க.தனசேகரன், முரசொலி செய்தியாசிரியர் கு.சேது ஆகியோர் உள்ளனர்.